## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மகாலிங்கம் | நாள் | 05.11.2024 |
| தகப்பனார் பெயர் | கண்ணுபையன் | | |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

38) வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் சிவசாமி என்பவருக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது குறித்து வாசகங்களில் குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால், சரியல்ல. பிதுர்ராஜ்ஜியமாக பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. சொத்து விவரத்தில் மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு பத்திர வாசகங்களில் மேற்படி சொத்து எந்த வகையில் பாத்தியப்பட்டது என்பது குறித்து சொல்லப்படவில்லை என்றாலும், சொத்து விவரத்தில் மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல.

39) மாதம்மாள் பெயரிலுள்ள கிரய பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால், படித்து பார்த்துள்ளேன். மேற்படி கிரய பத்திரத்தில் அதன் மூல பத்திரங்கள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. அதிலும் மாதம்மாளின் முன் விற்பனை தாரர்களுக்கு பிதுர்ராஜ்ஜியமாக பாத்தியப்பட்டது என்று தான் சொல்லியுள்ளார்கள். என் பாட்டி தங்கம்மாள் கடந்த 18.05.2011ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால், சரிதான். என் பாட்டி இறந்து 3 ஆண்டுகள் கழித்துதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான்.

40) என் பாட்டி உயிருடன் இருக்கும் பொழுதே என் அப்பாவும், அவரது சகோதரர்களும் அவர்களது சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால், ச.எண்.534/3A மற்றும் ச.எண்.534/3C இதிலுள்ள 1.06 ஏக்கர் நிலத்தை மட்டும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டனர். என் பாட்டிக்கு பாத்தியப்பட்ட மற்ற நிலங்களை பாகம் பிரித்துக்கொண்டனரா என்றால், பாகம் பிரித்துக்கொண்டனர். அதை பாகப்பிரிவினை பத்திரமாக எழுதிக்கொண்டனர்.

41) அவ்வாறு ச.எண்.534/3A மற்றும் ச.எண்.534/3C ஆகியவற்றிலுள்ள நிலங்களை வாய்மொழியாகவும், இதர நிலங்களை பாகப்பிரிவினை பத்திரம் மூலமாகவும், பாகபிரிவினை செய்து கொண்டதாக நான் சொல்லும் விவரத்தை இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வழக்குரையில் என் தந்தை சொல்லியுள்ளாரா என்றால், சொல்லியுள்ளார். எந்த வருடம் அவ்வாறு பாகபிரிவினை பத்திரம் செய்து கொண்டனர் என்றால், 1992 ம் வருடத்தில் செய்துகொண்டனர்.

42) என் பாட்டனார் என் பாட்டிக்கு முன்னரே இறந்துவிட்டாரா என்றால், ஆமாம். என் பாட்டனாருக்கு என் பாட்டியும், என் தந்தை, சித்தப்பாக்கள், அத்தை ஆகியோர் வாரிசுதாரர்கள் என்றால், சரிதான். இவ்வழக்கின் வழக்குரையில் 1992 ம் வருடத்தில் என் பாட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டதாகவும், அதில் தாவா சொத்துக்கள் என் தந்தைக்கும், என் பாட்டிக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்கள் அவரது மற்ற வாரிசுகளுக்கும் பாகமாய் ஒதுக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது என்றால், சரிதான்.

43) மேற்படி என் தந்தையால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்குரையில் பக்கம் 2, பத்தி 4ல், 16-வது வரியில் மேற்படி "1992" என்ற வருடம் மட்டும் தட்டச்சு செய்யப்படாமல், கையால் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல் வழக்குரை வழக்குமூலத்திலும் "1992" என்ற வருடம் மட்டும் தட்டச்சு செய்யப்படாமல், கையால் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். வாய்மொழி பாகப்பிரிவினையில் என் பாட்டிக்கு எந்த பாகமும் ஒதுக்கப்படவில்லையா என்றால், ஒதுக்கப்படவில்லை. என் பாட்டியை யார் ஜீவனாம்சம் செய்துகொள்வது அல்லது என் பாட்டிக்கு ஜீவனாம்ச தொகை வழங்கப்பட்டதா என்பது குறித்து மேற்படி பாகபிரிவினையில் என்ன முடிவு செய்யப்பட்டது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

44) வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழில் 15.08.1969 ம் தேதியில் தான் முதல் பதிவு நடைபெற்றுள்ளது என்றால், சரிதான். மேற்படி தேதியில் பதியப்பட்ட ஆவண எண் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ஆவண எண்.1662/1969 என

குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ச.எண்.534/3 ல் உள்ள நிலத்தை ரூ.2,500/–க்கு விலைக்கு பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். ச.எண்.534/3 ல் மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது, அதில் எவ்வளவு நிலம் கிரயம் பெறப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. மேற்படி வில்லங்க சான்றிதழில் உள்ள 2–வது பதிவில் ச.எண்.534/3B ல் 2.18 ஏக்கரில் 0.30 செண்ட் நிலத்தை சிவசாமியிடமிருந்து தங்கம்மாள் விலைக்கு வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். சாட்சி தற்போது மேற்படி 2–வது பதிவில் உள்ளது ச.எண்.534/3B அல்ல என்றும், அது ச.எண்.534/3 மட்டும் தான் என்றும், நஞ்சை என குறிப்பிடுவதை சுருக்கமாக "ந" என குறிப்பிடுவார்கள் என்றும், மேற்படி "ந" என்பது தான் "B" என்பது போல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கிறார்.

45) மேற்படி வா.சா.ஆ.4 ல் உள்ள 3 மற்றும் 4 பதிவுகளில் ச.எண்.534/3C ல் உள்ள 0.52.0 ஏர்ஸ் நிலத்தில் 0.09.0 ஏர்ஸ் நிலத்தையும், 4 வது பதிவில் 0.52.0 ஏர்ஸ் நிலத்தில் பொதுவில் 0.13.0 ஏர்ஸ் நிலத்தையும் கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.